உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

மலர் 1.] | ராக்ஷசஸ்ரீ வைகாசிமீ 1915ஸ்ரீ மேமீ | [இதழ் 5.

## ஞானப்பிரகாச சம்பாஷணை

(62 - ஆவது பக்கத் தொடர்ச்சி.)

### திருப்பாசுரம்.

*ஏதுக்க ளாலு மெடுத்த மொழி யாலு மிக்குச்*
*சோதிக்க வேண்டா சுடர்விட்டுள னெங்கள்சோதி*
*மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்*
*சாதுக்கள் மிக்கீ ரிறையே வந்து சார்மின்களே.*

ரா.—கடவுள் சித்துப் பொருளாகிய ஆன்மாவினாலுங் காணப் படாத பொருளானால் அவர் இருப்பை நாம் எவ்வாறு நிச்சயிக்கலாம்?

ஞா.—"ஞாலமேகரியாக நானுனை நச்சிநச்சிடவந்திடுங்காலமே" என்று தமிழ்வேதம் கூறுமாறு உலகத்தைக் கொண்டு நிச்சயித்தல் வேண்டும்.

ரா.—உலகம் ஒருவரால் படைக்கப்படாமலும், தோற்றமும் இறுதியுமில்லாமலும் எப்போதும் நிலைபெற்றிருக்கும் என்று சொல்லலாகாதோ ?

ஞா.—குயவனின்றிப் பாண்டமுண்டாய் விடுமா ?

ரா.—குயவன் பாண்டத்தைச் செய்தலையும், அப்பாண்டம் அழி வதையும் நாம் பார்க்கிறோம். கடவுள் உலகத்தைப் படைத்ததை யும் அது அழிந்துபோவதையும் பார்த்தவர் யார்? ஒருவரும் இலர். ஆதலால், பிரத்தியட்சப் பிரமாணத்தால் இவ்வுலகம் கடவுளால் தோன்றிநின்று அழிதலை விளக்கவேண்டும்.

ஞா.—உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் தோன்றி, சில காலமிருந்து, பின் அழிதலைப் பார்க்கிறோம். இப்படியே இவ்வுலக மும் ஒருகாலத்தில் தோன்றினதெனவும், ஒருகாலத்தில் அழியு

மெனவும் நிச்சயித்தல்வேண்டும். அன்றியும், இவ்வுலகம் அவன் அவள் அது என மூவகைப்பட்டு, தோன்றுங்கிரமத்திலே தோன்றி, நிற்குங்கிரமத்திலே நின்று, அழியுங்கிரமத்திலே யழிகின்றது. உலகத்திலுள்ள ஒவ்வொருபொருளின் தோற்றம் இருப்பு இறுதிகளைக் கூர்ந்து ஆராய்வோமாஞல் இதை யுணரலாகும். பேரறிவும் பேராற்றலும் படைத்த ஒரு கடவுளின்றி அவ்வளவு கிரமமாய் அவைகள் நடைபெறா. இதற்கொரு உதாரணங் காட்டுவோம். உயிர்கள் ஆண் பெண் என்னும் இருவகையாக இருக்கின்றன. இவற்றுள் ஆண் இன்றிப் பெண் உண்டாகாது. பெண்ணின்றி ஆணுண்டாகாது. ஆணும் பெண்ணுங் கலந்தே சிருட்டி நடைபெறும். இவ்விரண்டையும் நான்கு பூதங்களுங்கூடி உண்டாக்கினவெனில், முதலுண்டாக்கினது ஆணு அல்லது பெண்ணு என்னும் கேள்விகள் உண்டாகும். ஆண் என்னில், பெண் எப்போது உண்டாயிற்று? பெண் எனில் ஆண் எப்போது உண்டாயிற்று? ஆணையும் பெண்ணையும் ஒன்றுக்கொன்று காரணகாரியமாக நான்கு பூதங்களுஞ்சேர்ந்து உண்டாக்கினவா? அல்லது, அவ்விரண்டையுந் தனித்தனிக்காரியங்களாகவே யுண்டாக்கினவா? ஆணும் பெண்ணு மிருந்தாலல்லது சிருட்டி நடவாதென்று அறிந்தே அப்படியவைகளை யுண்டாக்கினவா? என்னுங் கேள்விகள் உண்டாகும். ஆதலால் சடமாகிய பூதங்கள் தாமே இவ்வளவு கிரமமாகக் காரியப்பட்டு வருகிறது என்று எண்ண இடமில்லை. ஆதலால் கடவுள் ஒருவரிருந்தே பிரபஞ்சத்தைக் காரியப்படுத்துகிறார் என்று உணர்தல் வேண்டும். அன்றியும், பூதங்களின் காரியமாகிய சரீரமானது எப்படி அதிலுள்ள அறிவு ரூபமாகிய ஆன்மா இயக்க இயங்குகின்றதோ, அப்படியே, பூதகாரியமாகிய இவ்வுலகமும் இதைச்சரீரமாகக்கொண்ட பேரறிவு ரூபமாகிய கடவுளியக்க இயங்குகின்றதென உணரலாகும்.

ஙா.—உலகம் இவ்வாறு இயங்குதலே அதின் இயற்கையென்னலாகாதோ?

ஞா.—பூதங்கள் சடமாகையால் அவை சித்து அசித்து என்னும் இருவகைப்பட்ட பிரபஞ்சமாக விரிந்து இயங்குதல் இயற்கையென்பது அறிவீனமாகும். அன்றியும், சடப்பொருள்கள் தாமே அசைவதில்லை. ஒருவர் அசைக்க அசையும். ஆதலால் இவ்வுலகமும் கடவுள் இயக்க இயங்குமேயன்றி தானே இயங்காது. மேலும், இவ்வுலகமாத்திரமன்றி பல உலகங்கள் ஆகாயத்தில் அந்தரமாக இருக்கின்றன. ஐரோப்பிய வானசாஸ்திரிகளும் இப்பூமண்டலமும்,

சூரியன், சனி, புதன், விழாயன் முதலிய மண்டலங்களும் ஆகாயப் பெருவெளியில் ஒன்றையொன்று ஆதாரமாகக்கொண்டு தத்தம் பரிமாணங்களைக் கடவாது தினகதி வருஷகதிகளுக்கேற்றவாறு சுழன்றும் இயங்கிக்கொண்டுமிருக்கின்றன வென்று சொல்லுகிறார்கள். இவைகளெல்லாம் சர்வசத்தியும் அளவிலாவாற்றலும் உள்ள ஒரு பரம்பொருளின் சங்கற்பமில்லாமல் தாமே இயற்கையாக நடைபெறுமா? ஒருக்காலும் நடைபெறாது. அவனன்றி யோரணுவு மசையாது.

ரா.—மரத்திலிருக்கும் மாங்காய் பழுத்துக் கீழே விழுவது இயற்கைதானே? இது கடவுள் செயலா? கடவுளில்லாவிட்டால் மாங்காய் பழுக்காதோ? பழுத்தபிறகு கீழேவிழாமல் மரத்திலேயே ஒட்டிக்கொண்டிருக்குமோ? அல்லது ஆகாயத்தில் பறந்து போய் விடுமோ?

ஞா.—மாங்கனி ஏன் கீழே விழுகிறது?

ரா.—பூமியினிடத்தில் (Gravity என்னும் ஆகர்ஷண) சத்தியொன்றிருக்கிறது. அதனால் பூமி எல்லாப்பொருள்களையும் தன்னிடத்தில் இழுத்துக்கொள்ளுகிறது. இப்படியே, காந்தக்கல்லினிடத்தில் ஒரு சத்தியிருக்கிறது. அந்தச் சத்தியினால் அது இரும்பைத் தன்னிடம் இழுத்துக்கொள்ளுகிறது. இவ்வாறே பலவித சத்திகளால் முற் கூறிய பல உலகங்கள் ஒன்றையொன்று இழுத்துக் கொண்டு ஆகாயப்பெருவெளியில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

ஞா.—இச்சத்திகளுள் ஏதேனும் ஒன்று இல்லாவிட்டால் இத்தனை உலகங்களும் நடைபெறுமா? ஒரு நொடிப்போதும் நடைபெறாது. ஆதலால் உயிர்களின்மீது வைத்த கருணையால் கடவுள் அவை நடைபெறவேண்டி இச்சத்திகளைப் படைத்திருப்பதோடு தாமும் அவைகளுக்கெல்லாம் காரணச் சத்தியாயிருக்கிறார் என்று நிச்சயித்தல் வேண்டும்.

ரா.— ஆனால், ஆத்திகர் கடவுள் என்று கூறுவது (Force என்னும்) இச்சத்தியைத்தானோ?

ஞா.—ஆத்திகர் அறிவில் பொருளாகிய சத்தியைக் கடவுள் என்று கூறுவதில்லை; அவர்கள் கூறுஞ் சத்தி அறிவோடுங் கூடிய சத்தியாகும். இது கிரியாசத்தியென்று சொல்லப்படும். கிரியையின்றி ஞானமும் ஞானமின்றி கிரியையும் இராதாகையால் ஆத்திகர் கூறுஞ்சத்தி ஞானக்கிரியா சத்தி யென்றுஞ் சொல்லப்படும். இச்சத்தியே அவர்கள் கூறும் கடவுளின் சொரூபமாகும்.

ரா.—கடவுள் ஒருவரிருந்து உலகத்தைப் படைத்துக் காத்து அழிக்கிறார் என்றால் அவரைப்படைத்துக்காத்து அழிப்பவர்யாவர்?

ஞா.—தோற்றக் கேடுகள் சடபதார்த்தங்களுக்கேயன்றி சித்துப்பொருள்களாகிய கடவுளுக்காவது ஆன்மாக்களுக்காவது இல்லை.

ரா.—ஆன்மாக்கள் பிறப்பதும் இறப்பதுமாக இருக்கின்றனவே; இதனை யெப்படி இல்லையென்று சொல்லுகிறீர்கள் ?

ஞா.—ஆன்மாக்கள் சரீரத்தை யெடுப்பது பிறப்பு என்றும், சரீரத்தைவிட்டு நீங்குவது இறப்பு என்றும் சொல்லப்படும். அவ்வளவேயன்றி ஆன்மாக்கள் உண்டாவதுமில்லை, அழிவதுமில்லை.

ரா.—ஆன்மாக்கள் தாமே பிறக்கின்றன, தாமே இறக்கின்றன என்றாலோ ?

ஞா.—ஆன்மாக்கள் அறிவுடைய பொருள்களாயினும் அவற்றின் அறிவு சிற்றறிவாயிருத்தலால் அவைகள் தாமே சரீரங்களை யெடுக்கா. உன்னையே நீ யோசித்துப்பார். நீயே உன்சரீரத்தைப் படைத்துக்கொண்டாயா ? இல்லையே.

ரா.—அறிவுப்பொருள்களாகிய ஆன்மாக்களுக்குக் கடவுள் சரீரத்தைக் கொடுப்பதுபோல் அறிவு ரூபமாகிய கடவுளுக்கும் அவரினும் உயர்ந்த வேறொரு கடவுள் சரீரத்தைக்கொடுத்து அவரையும் பிறக்கச்செய்யலாமே ?

ஞா.—ஆன்மாக்கள் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவைகளாயிருத்தலால், கடவுள் அவைகளின் அறிவையும் கிரியையும் மேலுமேலும் விளக்கவேண்டி அவைகளுக்குச் சரீரத்தைக் கொடுக்கிறார். அவர் பேரறிவும் பேராற்றலும் உடையவராயிருத்தலினால் அவருக்குச் சரீரமே வேண்டுவதில்லை. அவர் உயர் வொப்பில்லாத பேரறிவும் பேராற்றலுமுடையவராயிருக்க அவரினும் உயர்ந்தபேரறிவும் பேராற்றலும் உள்ளபொருள் ஒன்று இருக்கும் என்று எண்ணுவது மதியீனமாகும்.

ரா.—சுவாமி, அடியேன் அறியாமையால் கேட்கும் கேள்விகளால் தேவரீர் ஆயாசப்படாதிருக்கப் பிரார்த்திக்கிறேன்.

ஞா.—உனக்கு எவ்வளவு சந்தேகமிருந்தாலும் தாராளமாய்க் கேட்கலாம். அதனால் எனக்கு ஒரு சிறிதும் வருத்தமிராது.

ரா.—கடவுளுக்கும் உருவம் உண்டு என்றுசொல்லி அவரை உருவமாகப் பூசிக்கிறார்களே, அவ்வுருவம் அவருக்கு எப்படி வந்தது.

ஞா.—அவருக்கென ஒரு உருவமுமில்லை. அவர் ஆன்மாக்களால் சுட்டி யறியப்படாதவர். முதல் நடு இறுதியில்லாதவர்

ஞானமே வடிவமாயிருப்பவர். இன்னதன்மையரென்று பிறரால் நினைத்தற்கும் உரைத்தற்கும் இயலாதவர். உயிர்களைப்போல் விருப்பு வெறுப்பு உடையவரல்லர். உயிர்களுக் குயிராயிருப்பவர். சித்து அசித்து என்னும் இருவகைப் பொருள்களோடும் இரண்டறக் கலந்திருந்து அவைகளை யியக்கிக்கொண்டிருப்பவர்.

சிவப்பிரகாசம்.

ஈங்கிதுவென் றதுகடந்த வியல்பி னானு
மீறுமுத னடுவொன்று மிலாமை யானு
*மோங்கிவளர் ஞானமய னாத லானு
முண்மைபிறர்க் கறிவரிய வொருமை யானுந்
தாங்கரிய வெறுப்பினொடு விருப்புமெல்லாஞ்
சார்வரிய தனிமுதல்வ னாத லானு
நீங்கலரு முயிர்க்குயிராய் நிற்ற லானு
நிறுத்திடுவ னினைந்தவுரு நிமலன் றானே.

அவர் சிற்றறிவுடைய ஆன்மாக்களின் மனோவாக்குக் காயங்களால் உணரப்படாதவரா யிருத்தலால் அவர் அவைகளுக்கு அருள் செய்யவேண்டி பற்பல திருமேனிகளைக் கொள்ளுகிறார்.

ரா.—அவர் கொள்ளும் திருமேனியும் நம்முடைய சரீரத்தைப் போலவே பிரிதிவிமுதலிய பஞ்சபூதங்களாலாகிய திருமேனிதானோ?

ஞா.—அன்று. அவர் தமது அருட்சத்தியையே திருமேனியாகக்கொள்வர். அவர்கொள்ளும் பற்பல திருமேனிகளின் இலக்கணங்கள் சைவாகமங்களிலும் சித்தாந்த ஞானசாத்திரங்களிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அவைகளை வரன்முறையாகநல்லாசிரியரை யடைந்து அவர் பணியில்நின்று அறிந்துகொள்ளவேண்டும்.

ரா.—சுவாமி, தேவகுருவாகிய பிரகஸ்பதிபகவானே தேவேந்திரனுக்குக் கடவுளில்லை, ஆன்மாவில்லை, புண்ணியபாவங்களில்லை, சொர்க்கநரகங்களில்லை யென்று ஏன்போதித்தார்?

ஞா.—முன்னொருகாலத்தில் தேவேந்திரன் சூரபத்மன் முதலிய அசுரர்களால் மிகவும் துன்பமடைந்தமையால், அத்துன்பத்திற்குக் காரணமாயிருந்தது தேவேந்திர பதவியே என்றுணர்ந்து அப்பதவியை வெறுத்துக் காட்டையடைந்து தவஞ்செய்யப் புறப்பட்டான். அப்போது அத்தேவகுரு அவன் அவ்வாறு செய்யாதிருக்கவேண்டி அவனுக்கு உலகாயதமதத்தைப் போதித்தார்.

ரா.—இதென்ன அக்கிரமம்! ஒருவனுக்குக் கடவுள் நிச்சயம் உண்டாவதே அரிது. உண்டாயினும் உலகவாழ்க்கையில் வெறுப்

புண்டாவது அதனிலும் அரிது. போகியென்று பெயரெடுத்து, அரம்பைமாதர்கள் சாமரையிரட்டவும், மந்தாரமுங்கற்பகமும் புஷ்பவருஷம் சொரியவும், பலதேவர்கள் வந்து தன்னடிமிசை வீழ்ந்து வணங்கவும், சப்தரிஷிகளும் தன் சிவிகையைத் தாங்கிச்செல்லவும், தேவலோகத்தை அரசாண்டு, இந்திராணியின் ஈர்க்கிடைபோகா இளமுலைப்போகத்தில் அழுந்திக் கிடப்பவன் அவ்வாழ்க்கையை வெறுத்துத் தவஞ்செய்யப் புறப்படுவது அரியவற்றுளெல்லாம் அரியது. இவ்வாறிருக்க, அவனைத் தவஞ்செய்யாதபடி தடுத்து மீளவும் அப்போகத்தில் அழுத்துவது தருமமா?

ஞா.—உலகத்தில் மனிதர்களிடத்தில் மயானவைராக்கியம், புராணவைராக்கியம், பிரசவவைராக்கியம் என்னும் மூன்றுவைராக்கியங்களைக்காண்கிறோம். புராண வைராக்கியக்காரர்கள் புராணபடனஞ்செய்யுமிடத்தில் அன்பும் விரத்தியும் பெற்றவர்கள்போற் காணப்படுவார்கள். அவ்விடத்தை விட்டு நீங்கினவுடன் அன்பும் விரத்தியும் அவர்களைவிட்டு நீங்கிவிடும். மயான வைராக்கியக்காரர்கள் பிணத்துடன் மயானத்திற்குப்போகும்வரையில் விரத்தி வந்தவர்கள்போற் காணப்படுவார்கள். மயானத்தைவிட்டுத் திரும்பினால் பழையபடியே உலகப்பற்றில் அழுந்திவிடுவார்கள். பிரசவவேதனைப் படும்போது மாத்திரம் பெண்கள்புருஷனை வெறுப்பார்கள். அவ்வேதனை நீங்கினவுடன் புருஷனை விரும்புவார்கள். அவ்வாறே, இந்திரனும் அவுணர்களாலடைந்த பெருந்துன்பத்தினால், அச்சமயம் உலகவாழ்க்கையைவெறுத்தவனாகக் காணப்பட்டாலும், அவன் உண்மையாக நித்தியாநித்திய வத்துவிவேகம் பிறந்து துறவை விரும்பவில்லை. ஆதலால் அவனுக்குத் துறவறம் பயன்படாதென்பதையுணர்ந்தே, "பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்" என்னுந் திருக்குறளுக்கிணங்க, பிரகஸ்பதி பகவான் அவனுக்கு உலகாயதமதத்தைப் போதித்தனர்.

ரா.—சுவாமி, தாங்கள் இவ்விதமான சமாதானங்களைச்சொல்வது எனக்குப் பொருத்தமாகக் காணப்படவில்லை. சீடனை அஞ்ஞானத்தினின்றும் நீக்குகின்றவனல்லவோ குரு என்று சொல்லப்படுவான். கடவுளில்லை என்றுசொல்லி முன்னிருந்த ஞானத்தையுங் கெடுத்து உலகமயக்கமாகிய அஞ்ஞானத்தில் மேலுமேலும் அழுத்துபவனா குரு!

ஞா.—அப்பா, அஞ்ஞானத்தினின்றும் நீக்குபவனே "குரு" என்று சொல்லப்படுவான். ஆனால், தேவ குரு இந்திரனை அஞ

ஞானத்தினின்றும் நீக்குவதற்குப் பதிலாக அதில் அழுத்துதல் முறையோ, என்று நீ நன்றாய் வினவினாய். நீ சாஸ்திர விசாரணை செய்யாதவனாகையால் உனக்கு எம்மட்டில் சமாதானஞ் சொல்லவேண்டுமோ அம்மட்டில் மாத்திரம் சொல்லவேண்டி யுத்தி அநுபவவாயிலாகச் சமாதானம் கூறினேன். அதனாலும் நீ திருப்தியடையாமையால் இனிச்சுருதிவாயிலாக அதனை விளக்குகின்றேன். இதைக் கேட்டு உன் சந்தேகத்தை ஒழித்துவிடு. கடவுள் செய்யும் தொழில் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என ஐந்து வகைப்படும். இவற்றுள் அநுக்கிரகம் என்பதுதான் ஆன்மாக்கள் கடைசியாக அடையவேண்டிய பெரும்பயன். இதுவே பேரின்பம் என்றும் பரமுத்தி என்றும் சொல்லப்படும். ஆன்மாக்களுக்கு இப்பரமுத்தியைக் கொடுத்தற் பொருட்டே கடவுள் மற்ற நான்கு தொழில்களையுஞ் செய்வர். இந்நான்கு தொழில்களையும் அவர் செய்யாவிட்டால் ஆன்மாக்களுக்கு முத்தி சித்திக்காது. இந்நான்கினுள் திரோபவம் என்பதும் ஒன்று. இது ஆன்மாக்களுக்கு கன்ம நாசம் உண்டாக வேண்டி அவைகளைப் போகத்தில் அழுத்துதலாம். இதனை "ஈட்டிய வினைப்பய னெவற்றையு மறைத்து நின் றூட்டுவதாகும்" என மேலோர் விளங்க உரைத்தனர். இதனை இன்னும்விரிக்கிற்பெருகும். அன்றியும், இந்திர போகத்தை விரும்பி நூறு அசுவமேதஞ் செய்தவர்கள் இந்திரராவார்கள். பிரகஸ்பதியால் உலகாயதம் போதிக்கப்பெற்ற இந்திரனும், அதற்கு முன்னே நூறு அசுவமேதஞ் செய்து அவ்விந்திரபதவியை யடைந்தான். தீவினை செய்பவர்கள் தாம் செய்யும் தீவினைப்பயனை யனுபவித்தல் எப்படி அவசியமோ, அப்படியே பயனை விரும்பி நல்வினை செய்பவர்களும் தாம் செய்த நல்வினைப் பயனை யனுபவித்தலும் அவசியமாம். ஆதலால் அவ்விந்திரனும் முன் செய்த அச்வமேதப்பலனை யனுபவித்தல் அவசியமாக முடிந்தது. அவன் அதை யனுபவித்தாலன்றி அவனுக்குத் துறவறம் கைகூடாது. இதனை யுணர்ந்தே தேவகுரு அவனுக்கு அச்சமயத்தில் அவ்வாறு உபதேசித்தனர். இவரைப்போலவே கிருஷ்ணபகவானும் ஒரு காலத்தில் மாயாவாதம் என்னும் ஒரு மதத்தை அருச்சுனனுக்குப் போதித்தார்.

(இன்னும் வரும்.)

## சைவ சமயிகளுக்கு எச்சரிப்பு.

சைவசமயிகளாகிய நம்மவர்களுள் கல்விமான்கள் பலர் இல்லாமற் போகவில்லை. ஆயிரம் பதினாயிரம் இலட்சக் கணக்காகச் செலவிட்டுக் கோயிற்றிருப்பணிகளும் திருவிழாக்களும் நடத்தும் புண்ணியவான்களும் தருமகர்த்தர்களும் இல்லாமற் போகவில்லை. சத்திரங்கள் கட்டித் தக்கார் தகவிலரென்றும் பாராது ஓயாமல் பிராமணசந்தர்ப்பணை அன்னதான முதலியன செய்யுந் தருமவான்கள் பலர் இல்லாமற் போகவில்லை. வாதுக்குஞ் சண்டைக்கும் வாழ்வுக்குஞ் சாவுக்கும் குடிக்குங் கூத்திக்கும் எவ்வளவானாலும் பின்னிடாமல் மார்பைத் தட்டிக்கொண்டு செலவு செய்யுந் தனவான்கள் பலர் இல்லாமற் போகவில்லை. ஆனால், அந்தோ! அந்தோ!! சபைகளை வைத்து ஒழுங்காக நடத்தியும், ஒழுங்காக நடைபெறுஞ் சபைகளை யாதரித்தும், காலதேசவர்த்தமானங்களை யுணர்ந்து நமது சிறுவர்களுக்குச் சமயபோதனை செய்தும் சைவசமயபரிபாலனஞ் செய்யுஞ் சைவப்பிரபுக்களை மாத்திரம் காணேம்! காணேம்!! இதனாலேயே நமக்கு ஆலயங்கள் சாத்திரங்கள் முதலிய எல்லா நலங்களும் இருந்தும் அவற்றினாலடையவேண்டிய பெரும்பிரயோஜனங்களை நாம் இழந்து வருகிறோம். சமயங்களுக்கெல்லாம் நாயகமும் தாயகமுமாகிய நம்முடைய சைவசமயம் குன்றி விடுகின்றது. நம்மவர்கள் தங்கள் சமய உண்மைகளை யறியாமல் சமயக் குருடாயிருக்கிறார்கள். சைவ சமயாநுட்டானங்கள் தலைகீழாய் மாறிவிட்டன. ஆலயவழிபாடு அறிவிலிக்கென வெண்ணும் அறியாமை மேலிட்டு ஜனங்கள் கோவிலுக்குப்போகவுங் கூசுகிறார்கள். சிவசின்னங்களைத் தரிக்க லச்சைப்படுகிறார்கள். நமது சிறுவர்கள் யார் யாருடன் பழகுகின்றார்களோ அவரவர்களின் நடையுடைபாவனைகளை யநுசரிக்கிறார்கள். மாயாவாதிகளோடு பழகி மாயாவாதிகளாகவும், நாத்திகரோடு பழகி நாத்திகராகவும், புத்தரோடு பழகி புத்தராகவும், கிறிஸ்தவர்களோடு பழகி கிறிஸ்தவர்களாகவும், மகமதியர்களோடு பழகி மகமதியர்களாகவும் மாறுகிறார்கள். இவர்கள் கிறிஸ்தவர்களின் மாதாகோவில்களிலும் மகமதியரின் மசூதிகளிலும் பிரார்த்தனை செலுத்தி வணங்குகிறார்கள். விநாயக சதுர்த்தியில் தாங்கள் பூசை செய்யும் விநாயக விக்கிரகங்களைச் சிறு பிள்ளைகளிடங்கொடுத்து வீதியிலெறியவிட்டு அல்லா பண்டிகையில் மகமதியர்களைக் குருவாகவைத்துக்கொண்டு அல்லாவைக் குதிரைமேலேற்றிச் சர்வோபசாரத்துடன்

ஊர்கோலம் வருவித்து மகோற்சவங்கொண்டாடி வணங்குகிறார்கள். இவர்களுக்குச் சிவாலயத் திருவிழாக்களும் பிறசமயத்தவர் விழாக்களும் ஒரே திருவிழாவாக இருக்கின்றன. இவ்விதமாக நமது சைவ சமயமானது நிலைகுலைந்து மீகாமனில்லாமரக்கலம்போலத் தலை தடுமாறித் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. இச்சமயத்தில் கல்விமான்களும், தனவான்களும், சைவசமயத்தினர்க்கு ஆசாரியர்களாகிய ஆதி சைவப்பிராமணர்களும் தில்லைவாழ்ந்தணர் முதலிய சைவப்பிராமணர்களும், சைவமடாதிபதிகளும் முன் வந்து சைவசமயத்தை நிலை நிறுத்துவது கடமையாயிருந்தும் இதை இவர்கள் சிறிதும் கவனியாமல் கடவுளின் மீதும் கலிகாலத்தின் மீதும் பழிபோட்டுவிட்டு, தங்கள் தங்கள் சுயலாபத்தையே பார்த்துக்கொண்டு கவலையற்றிருக்கின்றார்கள். இவர்களுள் ஆதி சைவப்பிராமணர்கள் பெரும்பாலார் கல்வியறிவின்றி தங்கள் அருமை பெருமைகளை உணராமல், தங்களை மற்றப் பிராமணர்களினும் தாழ்ந்தவர்களாகவும் கல்லைக்கழுவி சீவனஞ் செய்பவர்களாகவும் எண்ணிக் கொண்டும், தங்களை விட்டாற் கோயில்களிற் பூசை செய்வார் வேறு யாரும் இல்லையாகையால் தாங்கள் எப்படியிருந்தாலும் தங்களுக்குச் சீவனம் நடந்துவிடுகிறதென்று தீர்மானித்துக்கொண்டு கல்வியில் தேர்ச்சி பெறுமலும், அதனால் சிவாலயபூசை முதலியவற்றை வேதாகமவிதிப்படிச் செய்யச் சத்தியற்றும் இருக்கிறார்கள். இவர்கள் பூசை செய்யுங் கோயில்கள் பலவித அக்கிரமங்களுக்கு வாசஸ்தானமாய் மூர்த்திகாமில்லாதழிகின்றன. திருத்தொண்டத்தொகையில் முதலிலே எடுத்துவணங்கப்படும் தில்லைவாழந்தணர்களும் சைவசமயாபிவிருத்தியில் கவலையற்று பலவிதத்திலும் ஏறக்குறைய ஆதிசைவர்களையொத்திருக்கிறார்கள். இவர்களியாவரும் ஒரேயிடத்திலும் ஒரேமரபினராகவும் ஒருகட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடக்கக்கூடியவர்களாகவும், பெருங்கூட்டத்தினராகவும் இருத்தலினால் இவர்கள் முயற்சி செய்தால் எளிதில் கல்வி கேள்விகளால் மேம்பட்டு உலக பூஜியராய் மற்றவர்களையுந் திருத்தலாம். இப்படிச்செய்து கொள்ள இவர்களுக்கும் முயற்சியில்லை. இவ்வாறாக நமது சமயத்தின்கதி எங்கு பார்த்தாலும் அதோகதியாயிருக்கிறது. இதைக்கண்ணுற்ற மிகமேதாவிகளாகிய ஐரோப்பியக் கிறிஸ்தவர்கள் இத்தேசத்தைக் கிறிஸ்தவ தேசமாக்கிவிடக் கங்கணங் கட்டிக்கொண்டு நாடு நகரம் மூலை முடுக்கு காடு மேடு எங்கும் பாடசாலைகள் வைத்து அதில் நம்முடைய சிறுவர்களுக்குத் தங்கள் சமயநூல்களையும் ஒழுக்கங்களையுங் கற்பித்தும்

இன்னும் பற்பல முயற்சிகளைச் செய்தும் நம்மவர்களைக் கூட்டங் கூட்டங்களாகவும் கிராமங்கிராமங்களாகவும் கிறிஸ்தவர்களாக்கிஇது வரையில் கோடிக்கணக்கான நம்மவர்களைக் கிறிஸ்தவர்களாக்கி விட்டார்கள். இன்னும் (சென்ஸஸ் கணக்கின்படி) வருடம் ஒன்றுக்கு முப்பதினாயிரம் நாற்பதினாயிரம் ஜனங்கள் வீதமாக நம்மவர்களைக் கிறிஸ்தவர்களாக்கி வருகிறார்கள். இவர்களால் முற்றிலுங் கிறிஸ்தவர்களாக மாறினவர்கள் போக எஞ்சி நின்றவர்களையும் நடையுடை பாவனைகளில் கிறிஸ்தவர்களாக்கிப் பதப்படுத்தி வைத்திருக்கிறார்கள். இதனால் நாளுக்கு நாள் நம்மவர்களின் தொகை குறைந்து வருகிறது. இவ்வாறு குறைந்துகொண்டே வருமானால் கடைசியாகச் சைவசமயம் இருந்த விடம் தெரியாமலே மறைந்துவிடக் கூடிய காலமும் வரக்கூடும். சைவசமயிகளே, இதை நீங்கள் எப்படிச் சகித்திருக்கிறீர்கள்? உங்களுக்குச் சமயாபிமான மில்லையா? இதைப்பார்க்க உங்கள் கண் கூசவில்லையா? மனம்பதைக்க வில்லையா? இதைத்தடுக்க உங்களாலாகாதா? கிறிஸ்தவர்கள் உங்கள் சிறுவர்களுக்குப் பாடசாலைகள் வைத்து அதன் மூலமாகத் தங்கள் சமய நூல்களையும் ஒழுக்கங்களையும் உங்கள் சிறுவர்களுக்குப் போதித்து வருவதற்கு நீங்களும் உடன்பட்டிருத்தல் எவ்வளவு அக்கிரமம்! நீங்களேன் அவர்களைப்போல் பாடசாலைகள் வைத்து அதில் உங்கள் பிள்ளைகளுக்கு உங்கள் சமய நூல்களைப் போதிக்கலாகாது? இவ்விஷயத்தில் கிறிஸ்தவர்கள் செயல் கடவுளுக்குப்பிரீதியோ? உம்மவர்கள் செய்கை கடவுளுக்குப் பிரீதியோ? இதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்; சிந்திப்பீர்களாயின் உம்மவர்களின் செய்கை மிக அக்கிரமமும், சிவாபராதமும், சமயத்துரோகமுமாம் என்று உங்களுக்கே தெரியவரும். நமது சிறுவர்களுக்கு நமது சமய நூல்களைப் போதிக்காதபோது நமக்கு எத்தனை கோயில்களிருந்துமென்ன? மடங்களிருந்து மென்ன? சாத்திரங்களிருந்து மென்ன? சபைகளிருந்துமென்ன? சமயாபிமானிகளிருந்து மென்ன? கடவுள் "கற்றவர் விழுங்குங் கற்பகக்கனி" எனவும், "கல்லா நெஞ்சில் நில்லானீசன்" எனவும் தமிழ்மறை முறையிடுவதை நீங்கள் அறியீர்களா? சைவசமயிகாள், மோசம் வந்து விட்டது. இன்னும்பழைய படியே குருட்டுத் தனமாய் தூங்காதீர்கள். விழித்துப் பாருங்கள். எங்கும் கிறிஸ்து பாடசாலைகள். எங்கும் கிறிஸ்து கோயில்கள். எங்கும் கிறிஸ்து மடங்கள். எங்கும் கிறிஸ்துசபைகள். எங்கும் கிறிஸ்து பிரார்த்தனைகள். எங்கும் கிறிஸ்து சமயிகள். எங்கும் கிறிஸ்து மயமாயி

ருக்கின்றது. இனி ஒருகணமும் சும்மாவிராதீர்கள். உங்கள் சிறுவர்கள் கிறிஸ்து பாடசாலைகளில் வாசியாதவண்ணம் நீங்களே எங்கும் பாடசாலைகள் வைத்து அதில் வருணாச்சிரமங்களுக்கும் கல்விக்கும் இசைய ஆங்கிலத்தோடு வேதாகமங்களும் சிவஞானபோத முதலிய நூல்களும் சைவாநுட்டானங்களுங் கற்பியுங்கள். இக்காலத்தில் வெறுந்தமிழ் படிப்போர் இல்லை. ஆதலால், ஆங்கில பாடசாலை வைத்து அதில் தமிழும் சைவ நூல்களும் கற்பித்தால் சைவசமய மாத்திரமன்றி தமிழ்ப் பாஷையும் விருத்தியாகும். தேசமும் க்ஷேமமடையும். நமதுசமயமும் தமிழ்முதலிய சுதேச பாஷைகளும் தேசமும் க்ஷேமமாயிருத்தற்கு இதைக் காட்டிலுஞ் சிறந்த உபாயம் வேறில்லை. இக்காலத்தில் வெறும் ஆங்கிலங் கற்றிருப்போர் சைவாநுட்டானங்களைக் கைவிட்டிருப்பதனால் ஆங்கிலத்தை யசட்டை செய்யாதீர்கள். சமயபோதனை யில்லாமையால் இவர்கள் சமய ஒழுக்கங்களைக் கைவிடுகிறார்களேயன்றி ஆங்கிலப் படிப்பாலன்று. ஆங்கிலப்படிப்போடு தமிழ் முதலிய சுதேசபாஷைகளும் சைவ நூல்களும் கற்பிக்கப்பட்டால் ஆங்கிலப்படிப்பே தமிழ் முதலிய சுதேசபாஷாபி விருத்திக்கும் சைவ சமயாபிவிருத்திக்கும் பெருந்துணையாகு மென்று உணருங்கள். சைவாபிமானிகாள், இதை நீங்கள் ஒவ்வொருவரும் அன்புகூர்ந்து சிந்தித்து இயன்ற அளவில் ஆங்கில பாடசாலைகள் வைத்து அதில் உங்கள் சிறுவர்களுக்கு ஆங்கிலமும் தமிழ் முதலிய சுதேச பாஷைகளும் வேதாகமமுதலிய நூல்களும் அநுட்டானங்களும் கற்பித்து, சைவசமயத்தைக் காப்பாற்றி உங்கள் சமயத்திற்கும் கடவுளுக்கும் பிரீதியாக நடந்து கொள்ளுங்கள்.

(இன்னும் வரும்.)

---

## பதி பசு பாசம்.

### சிருட்டி வாலாறு (51-வது பக்கத்தொடர்ச்சி.)

சில மதஸ்தர்கள் உலகமாவது இந்தநிலவுலகமொன்றேயென்வும், உயிர்களாவன இந்த நிலவுலகத்திலுள்ள உயிர்களே எனவும் எண்ணுகிறபடியால் இவர்கள் செய்யுஞ் சமயவாராய்ச்சியும் மிகவும் குறுகினதாய் இந்நிலவுலகத்தோடு மாத்திரம் சம்பந்தப்பட்டதாயிருக்கிறது. நெடுங்காலமாக ஐரோப்பியர் முதலானவர்களுக்கு இவ்வுலகம் உருண்டைவடிவாயிருப்பதும், இது ஆகாயவெளியில் அந்தரமாயியங்

கிக்கொண்டிருப்பதும் தெரியாமலேயிருந்தது. இதை நம்முன்னோர்கள் பண்டைக்காலந்தொடங்கி அறிந்திருப்பது மன்றி, இவ்வுலகம் முற்றிலும் உருண்டைவடிவாயிராமல் முட்டையைப்போல் உருண்டும் சற்றுநீண்டும் இருப்பதையும் அறிந்து இதற்கு அண்டம் என்று பேரிட்டார்கள். அன்றியும், இவ்வுலகமாத்திரமன்றி பலவகைப் பட்டவுலகங்கள் ஆகாயப்பெருவெளியில் அந்தரமாக இயங்கிக் கொண்டிருத்தலையும் மற்றவர்களெல்லாருக்கு முன்னமே நம்மவர்கள் அறிந்துள்ளார்கள். இதனை "அந்தரத்தகிலகோடி தாழாமனிலைநிற்க வில்லையோ" என்னும் ஸ்ரீ தாயுமானசுவாமிகளின் திருவாக்கால் உணரலாகும். கடவுளின் அருளாட்சிக்குட்பட்ட உலகங்கள் அளவிடற்கரியதோர் மகாசமுத்திரத்தையும், அவற்றுள் ஒன்றாகிய இப் பூவுலகமும் இதிலுள்ள உயிர்களும் அம்மகாசமுத்திரத்தின் ஓர் அலையையும் அவ்வலையிலுள்ள உயிர்களையும் ஒக்கும். ஆதலால், நம்முடைய வைதிகசைவசமய நூல்களிற் கூறப்பட்ட விஷயங்கள் முற்றிலும் பிரகிருதி தத்துவத்தின் காரியமாகிய இந்நிலவுலகத்தோடு மாத்திரம் சம்பந்தப்பட்டனவாயிராமல், நாதமுதல் பிரிதிவி ஈறாக உள்ள தத்துவங்கள் பலவற்றின் காரியங்களாக விரிந்துகிடக்கும் பலவகைப்பட்ட புவனங்களோடும் சம்பந்தப்பட்டனவா யிருக்கின்றன. வேத சிவாகமங்களையோதிச் சித்தாந்த ஞானசாத்திரங்கள் வாயிலாகப் பதிபசுபாசங்களாகிய பதார்த்தத்திரயங்களின் இலக்கணங்களையுணர்வார்க்கே இது விளங்கும். இவ்வுணர்ச்சியில்லாதார் பலவகைப்பட்ட புவனங்களிலுள்ள பலவகைப்பட்ட ஆன்மவர்க்கங்களின் பொருட்டு, பலபலவகையாகச் சிவபெருமானார் செய்தருளிய திருவிளையாடல்கள் தங்கள் மனத்திற்கு விஷயமாகாமல் அத்திருவிளையாடல்களைக் கூறும் புராணங்களைப் பொய்யெனக்கூறி யிடர்ப்படுவர்.

ஆன்மாக்கள் விஞ்ஞானகலர் எனவும் பிரளயாகலர் எனவும் சகலர் எனவும் முத்திறப்படுவர். இவர்களுள் விஞ்ஞானகலர் ஆணவம் என்னும் ஒருமலம் மாத்திரம் உடையவர்கள். பிரளயாகலர் ஆணவம் மாயை என்னும் இருமலங்களையுடையவர்கள். சகலர் ஆணவம் மாயை கன்மம் என்னும் மூன்று மலங்களையுடையவர்கள். சகலருடைய தனுவாதிகள் தூலமாகவும் அசுத்தமாகவும் இருக்கும். இவர்களைக்காட்டிலும் பிரளயாகலர் பலமடங்கு அறிவிலும் ஆற்றலிலும் உயர்ந்திருப்பார்கள். இவர்களுடைய தனுவாதிகள் சூக்குமமாகவும் சகலருடைய தனுவாதிகளைவிட சுத்தமாகவும் இருக்கும். இவர்களைக்காட்டிலும் விஞ்ஞானகலர் பலமடங்கு அறிவிலும் ஆற்

றவினும் உயர்ந்தவர்களாயிருப்பார்கள். இவர்களுடைய தனுவாதிகள், பரம் அல்லது அதி சூக்குமமாகவும், சிவமேயெனும்படி அதி பரிசுத்தமாகவும் இருக்கும்.

சகலர் எனப்படுவார் அண்டசம், (முட்டையில் தோன்றுவன), சுவேதசம் (வேர்வையில் தோன்றுவன), உற்பிச்சம் (வித்து வேர் கிழங்கு முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவன), சராயுசம் (கருப்பையில் தோன்றுவன) என்னும் நால்வகைத் தோற்றத்தில், தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்என்னும்எழுவகைப் பிறவிகளையெடுத்து, இருநூற்றிருபத்து நாலு புவனங்களில் வசிக்கும் உயிர்கள். பிரளயாகலராவார் மண்டலர் எண்மர், குரோதனர் எண்மர், வீரரொருவர், ஸ்ரீகண்டர் ஒருவர், உருத்திரர் நூற்றுவர் ஆக நூற்றுப்பதினெட்டுப் பேர்களாவர். இவர்களன்றி இன்னும் பல உருத்திரர் உண்டு. விஞ்ஞானகலர் அணுசதாசிவரென்றும், அட்டவித்தேசுரரென்றும், சத்தகோடி மகாமந்திரேசுரரென்றும் மூவகைப்பட்டிருப்பார்கள். இவர்கள் ஒவ்வொருவருள்ளும் பலபேதங்களுண்டு.

இம்மூவகை ஆன்மாக்களுக்கும் தனுகரணபுவனபோகங்களாகக் காரியப்படும் மாயையும் இவர்களுக்கேற்றவாறு சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என மூன்றுவகைப்படும்.

## சுத்தமாயை.

சுத்தமாயையானது குண்டலி, குடிலை, மகாமாயை, ஊர்த்துவமாயை, விந்து முதலியபேர்களைப் பெறும். இதிலிருந்து சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி யென்னும் நான்குவாக்குகளும், சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தையென்னும் தத்துவங்களும் உண்டாகும்.

இது சிவபெருமானுக்கு வைப்புச்சத்தியென்றும், பரிக்கிரக சத்தியென்றுஞ் சொல்லப்படும். (சிவத்தோடு அக்கினிக்கு உஷ்ணம் போலக்கலந்திருக்கும் சத்திக்குத்தாதான்மியச் சத்தியென்றுபெயர். தாதான்மியமாவது உடலின் பாகமாகிய கை உடலினின்றும் வேறாகப் பிரிக்கப்படாததுபோல் கூடியிருக்கை. பரிக்கிரகமாவது கையினுள்ள தடியைப்போல் பிரிந்தும்பிரியாமலும் இருக்கை). சுத்தமாயையின் காரியமாகிய சிவம் சத்தி முதலிய ஐந்துதத்துவங்களும் சிவதத்துவமென்றும், சுத்ததத்துவமென்றும், சுத்தாத்துவாவென்றும், பிரேரககாண்டம் என்றும் சொல்லப்படும்.

சுத்ததத்துவங்கள் ஐந்தினுள் சிவதத்துவமாவது சிவபரம்பொருள் வெறும் ஞானமாத்திரமாய் நின்ற அவசரம். இந்த அவசரத்தில் இவர் இலயசிவன் என்றும், சத்தர் என்றும் பேர்களைப் பெறுவர். இவருடைய திருமேனி நிட்களத்திருமேனியாம். சத்திதத்துவமாவது அவர் கிரியைமாத்திரமாய் நின்ற அவசரம். சாதாக்கியதத்துவமாவது அவர் ஞானமும் கிரியையும் சரியாயொத்து ஞானக்கிரியாசொரூபராய் நின்ற அவசரம். இந்த அவசரத்தில் அவர் சதாசிவரென்றும் யுத்தியுத்தர் என்றும் போகசிவன் என்றும் பேர்களைப்பெற்று சகளநிஷ்களத் திருமேனியுடையவரா யிருப்பர். ஈசுரதத்துவமாவது கிரியையேறியும் ஞானம் குறைந்தும் காரியங்களைப் பண்ணத்தொடங்கிய சத்தியுடன் கூடிநின்ற அவசரம். இந்த அவசரத்தில் அவர் மகேசுரர் என்றும், பிரவிருத்தர் என்றும் அதிகாரசிவன் என்றும் சொல்லப்பட்டுச் சகளத்திருமேனியுடையவராயிருப்பர். சுத்தவித்தை யென்பது ஞானமேறிக் கிரியை குறைந்துநின்ற அவசரம். இவ்வவசரத்தில் அவர் உருத்திரர் எனப்படுவர். இவ்வைந்தும் சிவபெருமானுர்க்குச்சுதந்திரவடிவங்களென்னப்படும்.

மேலே கூறிய சத்திதத்துவத்திலிருந்து நாததத்துவமும் நாததத்துவத்திலிருந்து விந்துதத்துவமும் தோன்றும். சிவபரம்பொருள் ஆணவமலத்தால் அறிவும் செயலும் நிகழப்பெறுமல் இருக்கும் ஆன்மாக்களுக்கு அறிவை விளக்கவந்த அவசரம் நாததத்துவம் என்னப்படும். அவைகளுக்குக் கிரியையை விளக்கவந்த அவசரம் விந்துதத்துவமென்னப்படும். இவை முறையே சிவதத்துவமென்றும் சத்திதத்துவமென்றும், நாதவிந்துக்கள் கூடின அவசரம் சதாசிவதத்துவமென்றுஞ் சொல்லப்படும்.

மேலே கூறியவாறு சிவபெருமான் ஒருவரே முறையே சத்தர், யுத்தியுத்தர், பிரவிருத்தர் எனவும், இலயசிவன், போகசிவன், அதிகாரசிவன் எனவும் சிவன், சதாசிவன், மகேசுரன் எனவும் சொல்லப்பட்டு, அருவம், அருவுருவம், உருவம் என்னும்திருமேனிகளைக் கொண்டிருப்பர்.

முற்கூறிய சுத்ததத்துவங்களைந்தும், அசுத்தமாயையின் காரியமாகிய காலதத்துவத்திற்கு முந்தினதாய் (காலாதீதமாய்) இருத்தலினுல், அவற்றுள் முன்னேதோன்றியதிது, பின்னேதோன்றியதிது என்று கூறுவதற்கிடமில்லாமல் சிவபெருமானுர்க்கு நித்திய அதிட்டானமாயிருக்கும். ஆனுல் இவைகளை ஒன்றினென்று தோன்றியதாக ஏன் சொல்லவேண்டுமெனில், முன்பின்னுக நிகழும்ஞானசத்தி

கிரியாசத்திகளின் வியாபாரபேதம் பற்றி அவ்வாறு சொல்லப்பட்டதென்க.

சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூடர், சபாபதி, கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், ஹரியர்த்தர், அர்த்தநாரீசுவரர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், கசமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோற்பவர் என்னும் இவ்விருபத்தைந்து வடிவங்களும் மகேசுரர் வடிவங்களாம்.

(இன்னும் வரும்.)

## பற்று.

(56 - வது பக்கத் தொடர்ச்சி.)

இவ்வுபாயங்களால் பற்றை யொழிப்பது கடினமாகும். பற்றை யொழிப்பதற்குப் பத்திமார்க்கமே எல்லாவற்றுள்ளும் எளியதும் மேலானதுமான மார்க்கம்.

**திருமந்திரம்.**

என்பே விறகா யிறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொறிய வறுப்பினு
மன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
யென்போன் மணியினை யெய்தவொண் ணாதே.

ஓர் பச்சிலையைப் பற்றி நின்றதோர் புழு அப்பச்சிலையை விட்டு நீங்குவதற்கு வேறொரு பச்சிலையைப் பற்றுவதுபோல், எப்போதும் ஒன்றைப்பற்றி வர்த்தித்தலையே இயற்கையாகவுடைய ஆன்மாக்கள் தாங்கள் பற்றிநின்ற பிரபஞ்சப்பற்றை விட்டு நீங்குவதற்குப் பற்றற்ற கடவுளைப் பெரும் பற்றாகப் பற்றவேண்டும். கடவுளிடத்தில் பற்று உயர உயர பிரபஞ்சப் பற்று தானே நீங்கிவிடும்.

**திருக்குறள்.**

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

அன்றியும், "பெற்ற சிறுகப்பெறாத பெரிதுள்ளுஞ் சிற்றுயிர்" எனக் குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்தவாறு, தாம்பெற்ற பொருள்களைச் சிறியனவாகவும் பெறாத பொருள்களைப் பெரியனவாகவும் எண்ணுதல் உயிர்களின் இயற்கை. உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் ஒன்றினொன்று உயர்ந்தனவும் தாழ்ந்தனவுமாக இருக்கும். ஆதலால், முன்னே ஒரு பொருளின்கண் பற்று

வைத்து அதைவருந்தித்தேடி யடைந்தபிறகு அதனினும் பெரிதாகிய வேறொரு பொருளை நோக்க இதற்குமுன் வருந்தித்தேடி யரிதிற் கிடைத்தபொருள் சிறிதாகத் தோன்றும். அது சிறிதாகத் தோன்றுதலும், அதனினும் பெரிதாகிய வேறொரு பொருளிடத்தில் ஆசை யுண்டாகிறது.

**தாயுமான சுவாமிகள்.**

ஆசைக்கொ ரளவில்லை யகிலமெல் லாங்கட்டி
யாளினுங் கடன்மீதிலே
யாணைசெல வேநினைவ ரளகேச னிகராக
வம்பொன்மிக வைத்தபேரு
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்தபேரு
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணாவரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பது
முறங்குவது மாகமுடியு
முள்ளதே போதுநா னெனக் குளறியே
யொன்றைவிட் டொன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமன் மனதற்ற
பரிசுத்த நிலையையருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

இவ்வாறே, உலகத்திலுள்ள ஒவ்வொருபொருளும் சொர்க்காதி பதவிகளும் அவைகளினும் மேம்பட்டபொருள்களையும் பதவிகளையும் நோக்க, அற்பமாகத்தோன்றிக்கொண்டே போய் மேம்பட்டபொருள்களின்மேல் ஆசை உண்டாதலினால் உயிர்களை எக்காலத்தும்பற்றுவிடாமல் தொடர்ந்துகொண்டே போகிறது. ஆதலினால் உயர்வொப்பில்லாத பரமானந்தப் பரம்பொருளாகிய பரசிவனிடத்தில் பற்றுவைத்தால் வேறொரு பொருளிடத்தில் பற்றுவைத்தற்கிடமில்லாமல் பற்று முற்றிலும் நீங்கிவிடும்.

**திருவாசகம்.**

தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றே னுண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தோறு மெப்போது
மனைத்தெலும் புண்ணெக வானந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

(இன்னும் வரும்.)